792

GISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

792 / 3-5

மாத பத்திரிகை

## செப்டம்பர்—1958.

விஷயம். பக்கம்.


காரண மின்றிக் காரிய மில்லை ... ... ... 1

சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது
துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... 9

சுகாதாரப் பொன் மொழிகள்
(‘பாகவி’ திரட்டியது) ... ... 16

பேசுவதற்கு விளக்கு ஒளி ஏன்?
டி. எப். ஆர். ம ஆலி ஸாஹிப் (பாகவி) சிறுவர் பகுதி 18

திருக்குர்ஆன் சாரசங்கிரஹம்
(ரஹ்மத் பாகவி) ... ... 21

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்
(ரஹ்மத் பாகவி). ... ... ... 25

மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... ... ... 29


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 AUG 1958
MADRAS

... இஸ்லாம் ஆபீஸ்:
...ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
Q7ന2N, K4y F1
1958
187078

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0–13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


# இங்லீஷ்-உர்து, உர்து-இங்லீஷ் அகருதிகள்

| | | |
|---|---|---|
| இங்கிலிஷ் உர்தூ பெரியது | விலை ரூ. | 9—50 |
| உர்தூ இங்கிலிஷ் பெரியது | விலை ரூ. | 9—50 |
| இங்கிலீஷ் உர்தூ சிறியது | விலை ரூ. | 3—00 |
| உர்தூ இங்கிலீஷ் சிறியது | விலை ரூ. | 3—00 |

# இங்லீஷ் குர்ஆன்

திருக் குர்ஆனின் இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு; முஹம்மது மர்மடுக் பிக்தால் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது: 464 பக்கங்கள் கொண்டது.

விலை ரூ. 3—00

ஷை குர்ஆன் அறபியும் சேர்ந்தது 2 பாகங்கள்

விலை ரூ. 15—00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# பத்ஹுல் இஸ்லாம்

செப்டம்பர்—1958.


THE REGISTRAR ... 28 AUG 1958 MADRAS

## காரண மின்றிக் காரிய மில்லை

"காரண மின்றிக் காரிய மில்லை; காரியமின்றிக் காரணமில்லை" என்று பொது விதியொன்று கூறப்படுவதுண்டு. இது எல்லா விஷயங்களுக்கும் பொருந்தும்படியான வாக்கியம்.

உலகத்தை நம் மதப் பெரியார்கள் "ஆலமுல் அஸ்பாப்" என்று கூறுகிறார்கள். 'காரண உலகம்' என்றும் சொல்லலாம். உலகின் எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும், அதற்கொரு காரணம் புலப்படும்.

இவ்வாறே ஒரு சமூகத்தின் வாழ்வுக்கும், அதன் தாழ்வுக்கும் ஒரு காரணம் இருக்கும். உலகம் மாறிக் கொண்டே இருக்கும் தன்மையுடையது. இயற்கைத் தோற்றம், அனுதினமும் ஒவ்வொரு வேளையும் மாறிக் கொண்டே இருப்பது நம் கண்களுக்குத் தெரிகிறது. காலமும் மாறிக் கொண்டே இருக்கிறது. காலையும் மாலையும் மாறி மாறி வருகிறது; இரவும் பகலும் மாறி மாறி வருகிறது. வெய்யிலும் மழையும் மாறி மாறி வருகிறது. குளிரும் வறட்சியும் மாறி மாறி வருகிறது. இவ்வாறே, ஜீவியமும் மரணமும் கூட மாறி மாறி வந்து கொண்டு தான் இருக்கிறது.

இதெல்லாம் நமக்கு எதை அறிவிக்கின்றன? உலகில் எதுவும் சதமில்லை; எல்லாம் மாறி மாறிக் கொண்டு தான் இருக்கும். இன்

றைக்கு இருக்கும் நிலை நாளைக்கு இருக்காது; நாளைக்கு இருக்கும் நிலை மறு நாளைக்கு இருக்காது.

ஒரு குழந்தை பிறக்கிறது. அப்போது அது சின்னஞ் சிறு சிசுவாக இருக்கிறது. போட்ட இடத்திலேயே அழுது கொண்டோ சிரித்துக் கொண்டோ கிடக்கிறது. பால்கொடுத்தால் சுவைத்துக் குடிக் கிறது. மலம் ஜலம், இருந்த இடத்திலேயே கழிந்து விடுகிறது. அசைந்து அமரவோ, ஊர்ந்து செல்லவோ, நடந்து போகவோ, ஓடி விளையாடவோ அச்சிசு பிராயத்தில் அதனால் முடியாது.

இந்தக் குழந்தை நிலை எப்போதும், எந்நாளும் ஒரே மாதிரி யாகவா இருந்து விடுகிறது! இல்லை. ஆறு மாதக் குழந்தை உட் கார்ந்து விளையாடுகிறது; இரு கரங்களாலும் இருகால் முட்டுக்களா லும் ஊர்ந்து செல்கிறது. எதையும் எடுத்து வாயில் போட்டுக் கொள்கிறது. விளையாட்டுக் கருவியை தட்டி உடைத்து விடுகிறது. இந்த நிலையே எப்போதுமா இருந்து விடுகிறது! குழந்தை சதா காலமும் குழந்தை யாகவா இருந்து விடுகிறது! இல்லை.

மூன்றுவயதுக் குழந்தையின் விளையாட்டும் வாழ்க்கை முறையும் மிக விநோதகரமானது. அதன் பேச்சும், சிரிப்பும், அழுகையும், பிடி வாதமும், ஆட்டமும் ஓட்டமும், உண்ணலும் பருகலும், ஊக்கமும் தூக்கமும் எல்லாம் பெற்றோர்க்கு ஆனந்தம் ஊட்டும் அற்புதக் காட்சிகளே யாகும்.

பையன் செய்யும் விஷமத்தனத்தில் கூட, பெற்றோர்க்கு ஓர் இன்பம் உண்டாகிறது. பையனின் விஷமத்தனத்துக்காக, தாயார் ஒரு சமயம் அதை அடித்து அதட்டி மிரட்டுகிறாள். மறு சமயம் 'குழந்தை தானே, போகட்டும்' என்று விட்டு விட்டு, மகிழ்ச்சி யடைகிறாள்.

பையன் பள்ளிக்கூடத்துக்குப் போகும் வயதில், அவனுடைய செயலும், பேச்சும், விளையாட்டும், உற்சாகமும் தனிப்பட்ட விசேஷ முடையவை. படிப்பதிலும், புது விஷயங்களை கற்றுக் கொள்கிறான். கல்வி கேள்விகளில் தேர்ச்சி யடைகிறான். சுறுசுறுப் பாக எந்தக் காரியத்தையும் தைரியமாகச் செய்கிறான்.

வாலிப வயதை அடைந்ததும் மனிதன் போக்கு மிக நூதன மாகவே அமைந்து விடுகிறது. அப்போது அவன் தன்னைப்

187078

போன்ற மனித இனத்தில், ஒருபெண் துணை வேண்டு மென்று விருப்பங் கொள்கிறான். இந்த எண்ணம் அவன் உள்ளத்தில் இயற்கையாகவே எழுச்சி பெற்று எழுகின்றது. ஒரு பெண்ணை யடைகிறான்; நேசம் கொள்கிறான்; காதலும் புரிகிறான். பெரியோர்களின் சம்மதம் பெற்று, அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டு, இன்பகரமாய் இல்லறம் நடத்தத் தொடங்கி விடுகிறான்.

அதன் பின் மாந்தன் குடும்பஸ்தனாகி விடுகிறான். அவன் மீது பல பொறுப்புக்கள் ஏற்படுகின்றன. மனைவிக்கு ஆகாரம், உடை, ஆபரணம், வசதியாவும் செய்து தர வேண்டியவனாகிறான். பிறகு குழந்தைகள் பிறக்கின்றன. குழந்தைகளைப் போஷிக்க வேண்டிய பொறுப்பும் அவன் தலை மீது சுமந்து விடுகிறது. குடும்பம் பெருகி, அவன் சம்பாதனையும் பெருகி, அவன் பெரிய மனிதனாகி விடுகின்றான்.

இறுதியாய் மனித வாழ்வு முதுமையில் முடிகிறது. உலகில் அனுபவிக்க வேண்டிய இன்பத்தை யெல்லாம் நன்கு அனுபவித்து, ஆசை தீர்ந்துவிடுகிறது. “இனி உலகில் நமக்கு என்ன இருக்கிறது; அல்லாஹ்விடம் போய்ச் சேர்வதற்கான ஆயத்தம் செய்து கொள்வோம்” என்று மதபக்தி ஒழுக்கத்தில் ஈடுபட்டு விடுகிறான். சதா ஆண்டவனையே நினைத்துக் கொண்டிருந்து விட்டு, ஒரு நாள் கண்ணை மூடிக் கொண்டு, உலகை விட்டே போய் விடுகின்றான்.

மனிதன், குழந்தையாய்ப் பிறந்தது முதல் இறந்து மறைந்தொழிகிற வரை, அவனது வாழ்நாளெல்லாம் காரணமயமாகவும் காரியமயமாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் அவன், ஒரு காரணத்தைக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்கிறான்; அல்லது ஒரு காரியத்துக்காக காரணத்தை உண்டாக்கிக் கொள்கிறான்.

காரணம் பெரிதா? காரியம் பெரிதா? என்று ஒரு கேள்வியை எழுப்பிக் கொள்வோம். இதற்கு ஒரு உதாரணமும் சொல்வோம்: அதாவது “படுத்துத் தூங்குவதற்கு நமக்கொரு கட்டில் வேண்டும்.” இதில் காரணமும் உண்டு; காரியமும் உண்டு. காரணம் என்பது சுகமாக படுத்துத் தூங்குவது என்பதாகும்; காரியம் என்பது உருவான ஒரு கட்டில் (படுக்கை) யாகும்.

படுத்துத் தூங்க வேண்டுமென்ற அவசியம் இல்லாதிருந்தால், கட்டில் என்ற ஒரு பொருளே உண்டாய் இருக்க மாட்டாது. தூக்கத்துக்குத் தான் கட்டில் வேண்டும்; கட்டிலுக்காக தூக்கம் அவசியமில்லை.

இவ்வாறே ஒவ்வொரு காரியத்துக்காகவும், ஒவ்வொரு காரணப் பொருள் உண்டாகிறது. எனவே, இப்பிரபஞ்சத்தில் கோடிக் கணக்கான பொருட்களைக் காண்கின்றோம். ஒவ்வொன்றும் ஒரு காரணத்தை முன்னிட்டே உண்டாக்கப்பட்டிருக்கின்றது.

“உலகைப் படைத்திட்டான் மனுவுக்காக, மனுவைப் படைத்திட்டான் தன்னை வணங்க” என்று ஞானிகளான அறிஞர்கள் போதனை செய்கிறார்களே, இதில் எவ்வளவு தத்துவார்த்தம் புதைந்திருக்கின்றது.

வானம், சந்திரன், சூரியன், மேகம், இடி, மின்னல், காற்று, மழை- ஆகிய வான மண்டலப் பொருட்களெல்லாம் யாரால் படைக்கப்பட்டன? எதற்காக படைக்கப்பட்டன? யாருக்காக படைக்கப் பட்டன? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மலை, நதி, மரம், செடி, குன்று, குளம், மடு, பள்ளம், தண்ணீர் பூமி, மண், பயிர், பூண்டு, புல், கல், மண்- இதெல்லாம் யாரால் படைக்கப்பட்டன? எதற்காக படைக்கப்பட்டன? யாருக்காக படைக்கப் பட்டன? என்பதையும் நாம் சிந்தித்து உணர்ந்து பார்க்க வேண்டும்.

பார்ஸி பாஷையில் மிகப் பெரும் புலவரும் பேரறிவாளரும் பலநூல்களின் கர்த்தாவு மாகிய ஷேக் ஸஅதி முஸ்லிஹுத்தீன் ஷிராஜி (றஹ்) அவர்களுடைய ஒரு கவிதையின் சாரமாவது:—

“அப்ரோ, பாதோ, மஹோ, குர்ஷீதோ, பலக் தர் காரந்த்— தாதூ நானே பகப் ஆரியோ பகப்லத் நாகுரீ-”

“இந்த மேகமும், காற்றும், சந்திரனும், சூரியனும், வானகோளமும் தம்தம் (கடமை) காரியங்களிலேயே சதா ஈடுபட்டு இருக்கின்றன. ஏ மனிதனே, இவை ஏன் இப்படி உனக்காக வேலை செய்து கொண்டிருக்கின்றன தெரியுமா? நீ ஒரு பிடிசோறு தின்னவேண்டும்; இங்ஙனம் உணவளிக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை மறந்து விடாமல் நீ நன்றி செலுத்த வேண்டும் என்பதற்கே யாகும்”—இது அந்தக் கவிதையின் கருத்து.

வானம், சூரியன், சந்திரன், மேகம், மழை, பூமி, பயிர், தானியம் எல்லாம் காரணம்; நாம் பசிக்காக உண்ணும் ஒரு பிடிச் சோறு காரியம். ஆஹா! ஒரு சிறு காரியத்துக்காக எத்தனை எத்தனை காரணங்கள் வேலை செய்ய வேண்டியதாய் இருக்கின்றன.!

'மேற்கூறிய காரணங்களில் ஒன்றாவது தவறிப் போய் விட்டால், காரியம் கைகூட மாட்டாது; வெய்யில் காயாவிட்டால் தானியம் விளையுமா? மழை பெய்யா விட்டால் செடி முளைக்குமா? சந்திரன் ஒளி தரா விட்டால் கனி பழுக்குமா? பூமியின் மண் இல்லா விட்டால் தாவரங்கள் உண்டாகுமா? ஒரே ஒரு நெல் விளைவதற்கும், மேற்கூறிய வண்ணம் சூரியன், சந்திரன், மேகம், காற்று, பூமி, தண்ணீர் எல்லாம் தம் கடமைகளைப் புரிய வேண்டியதாய் இருக்கிறது.

இந்தக் காரண- காரிய சாதனையை அமைத்தது யார்? அதாவது சூரிய-சந்திர-மேக-மழை அற்புதங்களை உண்டாக்குபவன் யார்? பூமியிலிருந்து தாவரத்தையும், அதிலிருந்து தானியத்தையும் உண்டாக்குபவன் யார்?—யார் என்பதை இதுவரை யாரும் எந்தக் காலத்திலும் கண்ணால் கண்டு தெளிந்ததில்லை. ஆனால், சிருஷ்டிகர்த்தாவின் மகிமையான இயற்கையின் அற்புதச் சாதனைகளை மட்டும், நாம் பிரத்தியக்ஷமாய் காணுகின்றோம்.

சிருஷ்டிகர்த்தாவை முஸ்லிம்களாகிய நாம் 'அல்லாஹ்' என்று சொல்லுகிறோம். மற்ற மதத்தினர், தத்தம் மொழிகளில் பல பெயர்களில் கூறுகின்றனர். மதநம்பிக்கை இல்லாத நாஸ்திகர்களும் கூட, 'அல்லாஹ்'வை வேறு பெயர் கொண்டு உச்சரிக்கின்றனர். அதாவது 'இயற்கை' (நேச்சர்) என்ற பதத்தை உபயோகிக்கின்றனர்.

முஸ்லிம்களாகிய நாம் இயற்கையாகிய 'பித்ரத்தை' (நேச்சரை) எல்லாம் வல்ல இறைவனான அல்லாஹ்வே உண்டாக்கி அமைத்து, இயங்க வைத்துள்ளான் என்று சொல்கிறோம். ஆனால், நாஸ்திகர்களோ, இயற்கை என்பது, தானே சுயமே உண்டாய் விட்ட சக்தியாகும் என்கின்றனர்.

மனிதத் தாயின் வயிற்றில் ஒரு சிசு உற்பத்தியாய் பிறப்பதும், பூமியிலிருந்து நெற்பயிர் முளைத்து தானியம் உண்டாவதும், அந்த நாஸ்திகவாதிகளுக்கு ஒரே மாதிரி விஷயம் தான். இதில் காரணம் எது? காரியம் எது? காரணகர்த்தன் யார்? என்பதை யெல்லாம்

அவர்கள் பாகு படுத்தி உணர்ந்துப் பார்ப்பதில்லை. எதையும் ஒரே குருட்டு வாதத்துடன், "இயற்கை" என்று சொல்லி விடுகின்றனர்.

விளையாட்டுச் சாமான் (பொம்மை) செய்வதற்கு, பாக்டரி (தொழிற்சாலை) ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அது ஒரு பெரிய தொழிற்சாலை. எந்த வேலையும் மின்சார சக்தியால், இயந்திரங்களால் செய்யப் ப டுவது. உள்ளே எப்படி வேலை நடைபெறுகிறதென்று நேரில் பார்க்க முடியாது. ஆனால், பொம்மைகள் தயாராய், அழகான தோற்றத்தில், ஒரு சிறு துவார வழியாய் வந்து விழுந்து கொண்டிருப்பதை மட்டும், நாம் பார்க்கலாம். மெஷினை இயங்க வைக்கும் மெக்கானிக், உள்ளே இருப்பான். அவனைப் பொது ஜனங்கள் காண முடியாது.

இந்த அபூர்வ முறையில், பொம்மைகள் தயாராய் வந்து விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்து நாம் ஆச்சரியப் படுகிறோம். இவ்வளவு பெரிய தொழிற்சாலையை ஸ்தாபித்து, ஆட்களை வைத்து வேலை வாங்கி, தினமும் ஆயிரக் கணக்கான பொம்மைகள், இயந்திர விசையினால் தயாராகி, வெளி வந்து விழச் செய்யும் முதலாளியைப் போற்றத்தான் வேண்டும்.

இங்ஙனமிருக்க, இதை ஒரு வீணன் பார்த்து விட்டு, "இதென்ன பிரமாதம்; இயற்கையால் தானே உண்டாகிறது; யாரும் இந்த தொழிற்சாலையை அமைக்க வில்லை; அது தானே, காலமாறுதலினால் உண்டாய் விட்டது; சுயமே பொம்மை உற்பத்தியாக, சுயமே வந்து விழுகிறது. இதற்காக யாரையும் போற்ற வேண்டியதில்லை" என்று சொன்னால், அவனுடைய மூடத்தனத்தை என்ன வென்று சொல்வது.

இவ்வாறு தான் இருக்கிறது, 'நேச்சர்' என்னும் நாஸ்திக வாதம் பேசுபவனின் பிடிவாதப் பேச்சு. "தொழிற்சாலையை யாருமே அமைக்க வில்லை; அதற்கு ஒரு முதலாளியும் கிடையாது; தானே எல்லாம் உண்டாய் விட்டது" என்பதை எப்படி ஒப்புக் கொள்வது. இவ்வாறே "வானம், சூரியன், சந்திரன், பூமி, ஆறு, மலை, மரம், செடி, யானை, குதிரை, மனிதன், குரங்கு, குழந்தை, கொசு, ஈ எல்லாம் சுயமே, இயற்கையின் பிரகாரம் தானே உண்டாகின்றன, சிருஷ்டிகர்த்தா என்றொரு இறைவனே கிடையாது; அல்லாஹ்வும்

கிடையாது; ஆண்டவனும் கிடையாது" என்று வாதிக்கும் நாஸ்திகர்கள் இக்காலத்தில் வெகு பேர் இருக்கிறார்கள்.

காரணமின்றிக் காரியமில்லை. சிருஷ்டிகர்த்தா இன்றி சிருஷ்டி இல்லை. படைப்பவ னின்றி படைப்பு இல்லை. தோட்டக்காரனின்றி தோட்ட மில்லை; ஆட்டக்காரனின்றி ஆட்டமில்லை; குயவன் இன்றி பானை இல்லை; கருமான் இன்றி கோடாரி இல்லை. தச்சன் இன்றி, மேஜை இல்லை. எழுதுபவன் இன்றி எழுத்து இல்லை. பேசுபவன் இன்றி பேச்சில்லை. நெருப்பு இன்றி புகை இல்லை.

இதைத்தான் 'முஸப்பிபுல் அஸ்பாப்' (காரணங்களை உண்டாக்கும் காரணகர்த்தன்) என்றும், இயற்கை என்னும் பித்ரத்தை படைத்த இறைவன் என்றும் முஸ்லிம்களாகிய நாம் கூறுகிறோம்.

எல்லாம் வல்ல இறைவனாகிய அல்லாஹு தஆலா, மனிதனை, மற்றெல்லா உயிரினங்களை விட மிக மிகச் சிரேஷ்டமாய் "அஷ்ரபுல் மக்லூக்காத்" ஆக படைத்திருக்கிறான். மற்ற சிருஷ்டி யெல்லாம் மனிதனுக்கு கட்டுப் பட்டவைகளாகும். எனவே, மனிதன் தன் அறிவினால் இறைவனை உணர்ந்து கொள்ளக் கடமை பட்டுள்ளான். காரண மின்றிக் காரியமில்லை; காரிய மின்றேல் காரணம் புலப்படாது. இதனை மனிதன் ஓர்ந்து உணர்ந்து பார்ப்பானாக.

புதிய நூல்! அரிய நூல்!!

# அஸ்ஸலாத்

### என்னும்

# தொழுகை

இக்காலை நம் பாமர முஸ்லிம் சகோதரர்களில் பலர், அரபு (உர்தூ) ஓதத் தெரியாத காரணத்தினால் கலிமா, ஈமான், இஸ்லாம், தொழுகை முதலிய முக்கிய விஷயங் கூட தெரியாமல் இருக்கின்றனர். அநேகர், தொழுகையில் நின்று என்ன செய்வது என்ன ஓதுவது என்று தெரியாமல் திகைக்கின்றனர்.

அப்படிப் பட்டவர்களின் நன்மைக்காகவே, இந்நூல் சுத்தத் தமிழில் எளிய நடையில் புரியும் வண்ணம், ஜனாப் மவ்லவி, டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி) அவர்களால் இயற்றப்பட்டு, ஆங்காங்கு அரபு பிளாக்குகளும், தொழுகைப் படங்களும் சேர்க்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கிறது.

இந்நூல் கைவசம் இருந்தால் ஈமான் இஸ்லாம் முதலிய விபரங்களைத் தெரிந்து கொள்வதோடு, சுயமே தொழுதுக் கொள்ளும் விபரத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

தொழுகையில் ஓதும் நிய்யத்துகள், ஸூராக்கள், துஆக்கள், ஓதல்கள் யாவும் அரபியில் போட்டு அதன்கீழ் உச்சரிப்பும் கருத்தும் போடப்பட் டிருக்கின்றன.

இன்னும், இந்நூலில் ஒளுவு, குஸ்லு, தயம்மும், ஜனாஸா தொழுகை, ஜும்ஆ தொழுகை, ஈது தொழுகை, ஜக்காத், நோன்பு, ஹஜ்ஜு முதலிய விபரங்களும் இருக்கின்றன.

கடைசியில் ஸூராக்களும் தொழுகை நேர அட்டவணையும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஷாபி கிதாபு வேறு, ஹனபி கிதாபு வேறு.

ஷாபி கிதாபு ஹதியா நயா பைசா. 60
ஹனபி கிதாபு ஹதியா நயா பைசா. 60

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம் 23.

கரீம் ஷரீபைப் பல பிரச்னைகள் எதிர் நோக்கி யிருந்தன. கிளப் இன்ஸானியத் மூடப் பெற்றது அதன் அங்கத்தினர்களுக்கு அனேக அசௌகரியங்களை விளைவித்திருந்தது. அதன் போஷகர்களிலும் அங்கத்தினர்களிலும் அநேகர் கிளப் கட்டிடத்துக்கு வருவதற்கு அஞ்சினர்; எந்த சமயத்திலும் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் வினாவுக்கும் விசாரணைக்கும் அவர்கள் ஆளாக வேண்டி யிருந்தது. பணியாள் ஷர்புத்தீன் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தான். எனினும், அவன் மீது— அவனது நடத்தையின் மீது கரீம் ஷரீப் மிகுந்த சந்தேகம் கொண்டிருந்தான். மற்ற வழிகளில் அவன் நம்பிக்கைக் குரியவனுகவும் அத்தியாவசியமான ஆசாமியாகவும் இருந்தான். பணியாளைப் பயமுறுத்தி எச்சரிக்க முற்பட்டபோது, சிப்பந்தி மாற்றப்பட்டாலன்றி வேலை செய்ய முடியாது என்று கரீம் ஷரீபிடம் அவன் தெரிவித்தான். அவனது கோரிக்கைக்கு கரீம் ஷரீப் இணங்கி, 'லிப்ட்' இயக்கும் சிப்பந்தியை வேலையிலிருந்து நீக்க வேண்டியதாயிற்று.

'லிப்ட்' இயக்கும் சிப்பந்தி என்னைக் காட்டிக் கொடுத்து விட்டான். எனவே, என்னைச் சுற்றி அபாயகரமான, காட்டிக் கொடுக்கக் கூடிய கயவன் இருந்து கொண்டிருப்பதை நான் விரும்ப வில்லை. ஷர்புத்தீன் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

"என்னிடம் அவன் இரகசியத்தைச் சொல்லி விட்டான். சிப்கத்துல்லாவைக் காட்டிக் கொடுக்காம விருப்பதற்கு நீ முயற் சித்ததாக அவன் சொன்னுன்" கரீம் சிரித்துக் கொண்டே சொன் ஞன்.

"அவரும் அங்கத்தினர் அல்லவா? எந்தெந்த அங்கத்தினர்களை அம்பலப் படுத்தி விடலாம், எந்தெந்த அங்கத்தினர்களை மறைத்துக் காப்பாற்றவேண்டும் என்பது எனக்குத் தெரியாது. வாஸ்தவத்தில், அவருக்கு நான் உதவி புரிந்தேன்- இல்லை, அவருக்கு உதவி புரி வதற்கு முயற்சிப்பதாக நினைத்துக் கொண்டேன். அது எனது வேலையன்றோ?"

அவனது பேச்சு தர்க்கரீதியாக ஒப்புக்கொள்ள வேண்டியதாக விருந்தது. எனவே, 'லிப்ட்' இயக்கும் சிப்பந்தி வேலையிலிருந்து நீக்கப்பட்டான்.

லிப்ட்டிலிருந்து இறங்கிச் சென்றதும், ஹாலில் சேறு பதிந்த அடிச்சுவட்டைக் கண்டான். பாதச் சுவடு ஈரமாக யிருந்தது.

"இங்கு யார் இருக்கிறார்கள்" அவன் வினவினான்.

"குறிப்பாக எவரும் இல்லை"

பாதச் சுவட்டைக் கரீம் சுட்டிக் காட்டினான்.

"சமீபத்தில் இங்கு யாரோ இருந்திருக்கிறார்கள்."

"அப்பாதச் சுவடு என்னுடையது" ஷர்புத்தின் தயக்க மின்றிச் சொன்னான். "டாக்ஸி அழைத்து வருவதற்காக நான் வெளியே சென்றேன்."

"இங்கு பஸ்கள் ஏதாவது இருக்கின்றனவா?"

ஷர்புத்தீன் பதில் சொல்ல வில்லை. கரீம் ஷரீப் அநேக காரி யங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. உதாரணமாக; பெஸன்ட் ரோடில் ஒரு வீட்டை விற்பனை செய்ய வேண்டி யிருந்தது. அவன் தந்திரோபாயங்கள் செய்து பணம் கொடுத்து அந்த வீட்டை உரிமையாக்கி யிருந்தான், ஒரு வருடத்துக்கு தளவாட சாமான்கள் வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தன. அங்கு சூதாட்ட கிளப் பிரத்தியேகமாக நடத்த வேண்டு மென்பது அவனது சகாக்களின் உத்தேசமாக இருந்தது. துரதிர்ஷ்ட வசமாக, விலைமதிக்க முடியாத ஓவியங்களையும் பழைய நகைகளையும் வைத்திருந்த அதன் சொந்தக்காரன் புதிய குடித்தனக்காரனின்- கரீம் ஷரீபின் கையாளின்- குணாதிசயத்தைத் தெரிந்து கொண்டு ஒப்பந்தத்தை உடனே ரத்துச் செய்து விட்டான். இந்த லேவா தேவியால் கரீம் ஷரீபுக்குச் சுமார் ஆயிரம் ரூபாய் செலவாகி யிருந்தது. பணம் பாழாகப் போவதை கரீம் வெறுத்தான்.

இரவு வெகுநேரம் கழித்து அவன் கிளப்பை விட்டுக் கிளம்பினான். மழை பெய்து தெருவெல்லாம் சேறும் சகதியுமாக விருந்தது. அவன் வெளியே சென்ற போது தெரு வெறிச்சென்றிருந்தது.

அவன் இரண்டடி எடுத்து வைத்ததும், கதவுப் பக்கத்திலிருந்து ஒரு மனிதன் வெளியே தோன்றி அவனுக்குக் குறுக்கே நின்று கொண்டான். கரீம் ஷரீப் உடனே சட்டைப் பையில் கை விட்டான்; அவன் எப்போதும் துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பது வழக்கம்.

"உனது துப்பாக்கியைத் தொடாதே" கரீம் ஷரீபுக்குப் பழக்கமான குரல் கூறியது.

அவன் முன்பக்கம் கண்ணோட்டம் செலுத்தினான். இருட்டில் அந்த ஆசாமியின் முகத்தை அவனால் பார்க்க முடிய வில்லை.

"நீ யார்?"

"உனது பழைய நண்பன். உனது சகாக்கள் அனைவரையும் மறந்து விட்டதாகச் சொல்லாதே."

கரீம் ஷரீபுக்கு அவன் யாரென்பது விளங்கி விட்டது.

"ஓ, நீ பஸ்லுர் ரஹ்மான் அல்லவா?"

"ஆம்! நான் பஸ்லுர் ரஹ்மான்தான். நான் வேறு யாராக இருக்க முடியும்? உம்மைப் பார்ப்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன். எனக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த கனவானைக் காணமுடியுமா என்று ஏங்கிக் கொண்டிருந்தேன். எனக்குப் பதினைந்து சவுக்கடி கிடைத்தது. நீர் சவுக்கடி படவில்லை அல்லவா? நீர் நினைக்கிறபடி, அது சகிக்கக் கூடிய தண்டனை அல்ல. என்னை எனது நிலவறைக்குக் கொண்டு சென்று எனது முதுகில் சவுக்குப் பதியவைத்த பிறகு நான் ஏழு நாட்கள் எழுந்திருக்கவே யில்லை. எனது தூக்கத்தையும் அது பாதித்தது இயல்பே யாகும்; ஆயினும் ஒரு வகையில் எனக்கு அது அனுகூலமாகவே யிருந்தது. ஒரு வாரம் படுக்கையாகக் கிடந்தமையால் நான் சிந்திப்பதற்கு வசதியாக விருந்தது. ஒரு அடிக்கு ஆயிரம் ரூபாய் வீதம் எனக்கு அடி கிடைக்கச் செய்தவரிடம் கேட்பது குற்றமில்லை என்று நினைத்தேன். நான் நினைத்தது சரி என்று எண்ணுகிறீர்களா?"

கரீம் ஷரீப் முகத்தைச் சுளித்து உதட்டைக் கடித்துக் கொண்டான்.

"நீ நஷ்டஈடு கோருகிறாயா? பதினையாயிரம் ரூபாய்-அது தானே நீ கேட்கும் நஷ்டஈட்டுத் தொகை?"

"பதினையாயிரம் ரூபாய் கிடைத்தால் நான் நல்ல விதமாக, நாணயமாக வாழ முடியும். நான் வெளிதேசம் சென்று நல்ல வீடு வாங்கி கம்பீரமாகக் காலம் கழிக்க முடியும் என்று நினைக்கிறேன்."

"டெஹ்ராடன் சிறை என்னவாயிற்று?" கரீம் ஷரீப் உறுமினான். "என்னிடமிருந்து பதினையாயிரம் ரூபாய்-இல்லை பதினைந்து செல்லாக் காசுகூட பெறமுடியாது. எனக்கு வழி விட்டு விலகி நில்.'

அவன் முன்னேறிச் சென்றான். பஸ்லுர் ரஹ்மான் வழிவிட்டு ஒதுங்கி நின்றான். கரீமின் கரத்தில் மின்னிக் கொண்டிருந்ததை அவன் கவனித்து விட்டான்.

கரீம் ஷரீப் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றான். எந்த நிலையையும் சமாளிப்பதற்குரிய ஆயத்தத்தோடு அவன் சென்றான்.

"உனது துப்பாக்கி பளபளவென மின்னுகிறது" பழைய கேடி பஸ்லுர் ரஹ்மான் பகர்ந்தான். "நீ துப்பாக்கியால் சுட முடியாத நிலையில் இருக்கும் பொழுது என்றாவது ஒருநாள் உம்மை நான் சந்திக்க முடியும் என்று நம்புகிறேன்."

கரீம் ஷரீபுக்கு ஒரு எண்ணம் உதித்தது. அவன் உடனே பஸ்லுர் ரஹ்மான் பக்கம் திரும்பி வந்தான்: அவனது பேச்சில் இப்போது கனிவும் குழைவும் காணப்பட்டது.

"பஸ்லுர் ரஹ்மான், வீண் விதண்டாவாதம் செய்வதால் என்ன பயன் ஏற்படப் போகிறது? உன்னை நான் கைவிட்டு விடவில்லை; காட்டிக் கொடுக்கவுமில்லை. போலீஸ்காரனை நீ கையப் புடைத்த போது பத்து அல்லது பன்னிரண்டு பேர் பார்த்துக் கொண்டிருந்தனர்."

"ஆனால் அந்த பத்து அல்லது பன்னிரண்டு பேரும் சாக்ஷி சொல்வதற்கு முன் வரவில்லை." பழைய கேடி கோபத்துடன் பேசினான். "கைதியான நீ ஒருவன் மட்டுமே அக்காரியத்தைச் செய்தாய். சம்பவம் நிகழ்ந்த பொழுது வேறு எந்த போலீஸ் காரனும் இருக்கவில்லை."

"அது நிகழ்ந்து வெகு காலமாயிற்று" சிறிது சிந்தனைக்குப் பிறகு கரீம் ஷரீப் சொன்னான். "இப்போது உன்னால் எனக்கு எவ்வித தொல்லையும் விளைவிக்க முடியாது. பதினையாயிரம் ரூபாய் நான் கொடுப்பது முடியாத காரியம். என்னிடம் அவ்வளவு பிரம்மாண்டமான தொகையை நீ கேட்பதும் முட்டாள் தனமானது. ஆனால் சில நூறுகள் வேண்டுமானால் தர முடியும். நீ ஒப்புக் கொண்டால் உனக்கு அப்பணம் அனுப்பி வைக்கிறேன்."

"இப்போதே அப்பணம் எனக்குக் கிடைப்பதா யிருந்தால் சரி."

"இப்போது என்னால் பணம் கொடுக்க முடியாது; ஏனெனில் என்னிடம் இப்போது பணம் இல்லை. உன்னை எங்குக் காண முடியும் என்பதைச் சொன்னால் காலையில் காசுடன் பையனை அங்கு அனுப்பி வைக்கிறேன்."

பஸ்லுர் ரஹ்மான் தயங்கினான். பிறகு விலாசத்தைச் சொன்னான்.

"உனது சொந்த பெயரில் அங்கு இருந்து கொண்டிருக்கிறாயா? அல்லது வேறு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாயா?"

"இல்லை, எனது சொந்த பெயரில்தான் நான் இருந்து கொண்டிருக்கிறேன். எனவே, நான் சொன்ன விலாசத்தில் எனது பெயரைச் சொன்னால் போதும்."

அவனது விலாசத்தை கரீம் ஷரீப் மனனஞ் செய்து கொண்டான்.

"காலை பத்துமணிக்குக் காசு கிடைத்து விடும். என்னுடன் நீ சண்டை யிடுவது உனது நலனுக்கு உகந்ததல்ல. பதினையாயிரம் அல்ல இருபதினாயிரம்கூட இலகுவில் சம்பாதிக்கக் கூடிய வேலையை உனக்கு வாங்கித்தர முடியும்."

பழைய கேடியின் கோபமெல்லாம் மாயமாய் மறைந்தது. புன்னகை ததும்ப அவன் கேட்டான் "எங்கே?"

''பிராட்வேயில் ஒரு வீடு இருக்கிறது'' கரீம் ஷரீப் தயங்காமல் சொன்னான். அந்த வீட்டு எண்ணையும் அவன் தெரிவித்தான்.

தற்செயலாக கரீம் ஷரீபுக்கு அந்த வீட்டைப்பற்றிய விபரம் தெரிந் திருந்தது. அந்த சமயத்தில் அவ்வீடு காலியாகக் கிடந்தது. ஒரே ஒரு மனிதர் மட்டும் அங்கு காவலுக்காக இருந்தார்.

''இங்கு சிறிது காத்துக் கொண்டிரு. நான் உள்ளே போய் வருகிறேன்.''

கிளப்புக்குள் விரைந்து, மூன்றாவது மாடியிலுள்ள அறைக்குள் கரீம் ஷரீப் பிரவேசித்தான். மேஜை அறையைத் திறந்து, சிறு சாவிக்கொத்தை வெளியே எடுத்தான். அவை திருட்டு சாவிகள்; அசல் சாவிகள் சிறிது நேரம் அவனிடம் இருந்த பொழுது, அவற்றைப் பார்த்து அவை உடனே செய்யப்பட்டவை. பின்னர் திரும்பிச் சென்றபோது, பஸ்லுர் ரஹ்மான் முன் விட்டுச் சென்ற இடத்திலேயே நின்றிருக்கக் கண்டான்.

''இதோ சாவிகள் இருக்கின்றன. வீடு காலியாகக் கிடக்கிறது. நமது ஆட்களிலொருவன் அவ் வீட்டுச் சாவிகளைக் கடன் வாங்கி வந்தான். அவற்றைப் பார்த்து இந்த சாவிகள் தயாரிக்கப் பட்டவை. ஒரு இரும்புப் பெட்டியில் எண்ணாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் உள்ளன. பிரதான அறையில் அந்த நகைகள் இருக்கின்றன. அவற்றைத் தவறாமல் எடுத்துக் கொள். மற்றும் அநேக வெள்ளித் தட்டுகளும் இருக்கின்றன. அதன் விலையை மதிக்க முடியாது.''

சாவிகளை கையில் வைத்துக் கொண்டு செல்வந்தனாகிவிட்டதாக பூரிப்பு அடைந்தான் அவன்.

''அந்த செல்வத்தை அபகரிப்பதற்கு நீர் ஏன் முயற்சிக்க வில்லை.''

''ஏனெனில், அந்த தொழிலில் இப்போது நான் பிரவேசிப்ப தில்லை. இப்போது நான் நேர்மையாக நடந்து வருகிறேன். ஆனால் நீ உஷாராக இருக்கவேண்டும். இன்றே இக்காரியத்தை முடித்து விட முடியாது. சில இரவுகள் காத்திருந்து கவனமாகக் காரியத்தைச் செய்ய வேண்டும். இக்காரியத்தில் நீ சிறிது முந்தினாலும் ஆபத்து, பிந்தினாலும் ஆபத்து. ஏனெனில் இன்னும் இரண்டொரு தினங்களில் வீட்டுச் சொந்தக் காரர்கள் திரும்பி வந்து விடுவார்கள்.''

''ஆனால், என்னிடம் ஏன் சாவிகளைக் கொடுக்கிறீர்?'' சந்தேகத்தோடு அவன் கேட்டான்.

''வேறு எவரும் இல்லாததால் உன்னிடம் அக்காரியத்தை ஒப்புவிக்கிறேன். நகைகள் அங்கு இல்லாமலும் இருக்கலாம்; அவை அங்கிருந்து அகற்றப் பட்டிருக்கலாம். ஆனால் ஏராளமான வெள்ளித் தட்டுகள் இருக்கின்றன. சரியான ஆள் கிடைத்திருப்பானானால், இந்த பொக்கிஷத்தை உன்னிடம் ஒப்புவித்திருக்க மாட்டேன்—உன்

னிடமிருந்து ஏதாவது எனக்குப் பங்கு கிடைக்குமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது."

"உனக்கு உனது பங்கு கிடைக்கும்." பஸ்லுர் ரஹ்மான் முரட்டுத் தனமாகச் சொன்னான். "இந்த காரியத்தை நான் ஏற்றுக் கொள்வது அபாயகரமானது என்பது எனக்குத் தெரியும்; நீர் காட்டிக் கொடுக்கும் கயமைக் குணம் படைத்த வரல்லவா? எனினும், துணிந்து அக்காரியத்தில் ஈடுபடுகிறேன். இவ்விஷயம் பற்றி நீ போலீஸுக்குத் தகவல் கொடுப்பாயாயின், உன்னை நான் தயை தாக்ஷயமின்றிக் கொன்று விடுவேன். ஆம், நீ காட்டிக் கொடுக்கத் துணிந்தால், உனது உயிருக்கு உலை வைத்து விடுவேன்."

"எனது கொலை பற்றிய பயமுறுத்தல்களைக் கேட்டுக் கேட்டு எனக்குச் சலித்து விட்டது." கரீம் ஷரீப் அமைதியாகப் பேசினான். "அக்காரியத்தைச் செய்வதற்கு விருப்ப மில்லா விட்டால், அதனை விட்டு விடு, காலையில் உனக்கு பணம் அனுப்பி வைக்கிறேன். உனக்கு நான் செய்யக் கூடியது அவ்வளவு தான். அந்த சாவிகளை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு."

"அதைப் பற்றி நான் சிந்தித்து முடிவு செய்வேன்." அவ்வாறு அவன் சொல்லி விட்டு வேறு வார்த்தை எதுவும் சொல்லாமல் அங்கிருந்து அகன்றான்.

அப்போது மணி ஒன்று. லிப்டைத் தானே இயக்கி, கரீம் ஷரீப் மீண்டும் மாடிக்குச் சென்றான்.

"ஷர்புத்தீன், எல்லோரும் சென்று விட்டார்களா?" அவன் வினவினான்.

கொட்டாவியை அடக்கிச் சமாளித்துக் கொண்டு பணியாள் தலை யசைத்தான்.

"மூன்றும் எண்ணுள்ள அறையில் ஒரு கனவானும் ஒரு காரிகையும் இருக்கிறார்கள். ஒன்பது மணி முதல் அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்குள் அவர்களது சண்டை ஓய்ந்து விட்டிருக்க வேண்டும்."

துப்பறியும் இலாகாவிலே சிறு பதவிகளி லுள்ளவர்களில் அநேகரை அவன் சிநேகம் செய்து வைத்திருந்தான். அவர்களது அறிமுகத்தை நீடித்து நிலைத்திருக்கச் செய்வதற்காக அவன் அதிகம் செலவு செய்ய வேண்டியதாக விருந்தது. எனினும், "சிறு துரும்பும் பல் குத்த உதவும்" என்பது போல நல்ல சமயங்களில் அந்த ஆசாமிகளால் அவனுக்கு அனுகூலம் விளைந்து கொண்டிருந்தது. அன்றிரவு அவனது அதிர்ஷ்டம் போலும், ஸி. ஐ. டி. அலுவலகத்தில் சார்ஜண்ட் ஸிராஜுத்தீன் இருந்தார். சினிமா தியேட்டரில் நகை களவு போயிருந்தது; அக்களவு சம்பந்தமாக அவர் அந்நேரம் வரை அலுவலகத்தில் அமர்ந்திருக்க வேண்டியதாக விருந்தது.

"ஓ, சார்ஜன்ட் ஸிராஜுத்தீனு பேசுவது" டெலிபோனை எடுத்து மிக மெதுவான குரலில் கரீம் ஷரீப் பேசினுன். தனது தந்தி விலாசத்தை அவன் சொன்னுன். இது போன்ற நுட்பமான, இரகசியமான பேச்சு வார்த்தைகள் நிகழ்த்துவதற்கு அந்த விலாசம் அனுகூலமாக விருந்தது.

அசாதாரண காரிய மெதுவுமில்லாவிடில் போலீஸ் தலைமைக் காரியாலயத்துக்கு கரீம் ஷரீப் 'போன்' செய்வதில்லையாதலால், சார்ஜன்ட் உஷாராக விருந்தார்.

"மாதக் கடைசி அல்லவா? உங்களுக்கு ஒரு 'கேஸ்' வேண்டுமா?—உண்மையான 'கேஸ்', பஸ்லுர் ரஹ்மான் என்றெருவன் இருக்கிருனே தெரியுமா?"

"பழைய கேடி பஸ்லுர் ரஹ்மான் தானே? ஆம், இன்று அவனைப் பார்த்தேன். அவன் என்ன செய்து கொண்டிருக்கிருன்?"

"173, பிராட்வேயில் வெள்ளிப் பாத்திரங்களை அவன் திருடிக் கொண்டிருக்கிருன். முன் வாசல் பக்கம் போய்ப் பாருங்கள்; அவன் உள்ளே செல்வதை நீங்கள் நேரில் பார்க்கலாம். நீங்கள் உஷாராக இருக்க வேண்டும்; ஏனெனில் அவனிடம் துப்பாக்கி இருக்கிறது. நீங்கள் உடனே சென்ருல் அவனைக் கையும் களவுமாகப் பிடித்து விடலாம்."

ரிஸீவரைக் கீழே வைத்து விட்டு அவன் புன்னகை புரிந்தான். சாதாரண கேடியின் ஏமாளித் தன்மை அவனுக்கு ஆச்சரியம் அளித்து வந்தது.

(தொடரும்)

## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப் பட்டுள்ளன.

115 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1–00

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# சுகாதாரப் பொன் மொழிகள்

('பாகவி' திரட்டியது)

"அதிகம் உணவு உண்டு அஜீரணத்தால் பேதி கண்டு மாண்டு போகிறவர்கள், போர்க்களத்தில் வாளா யுத்தத்தால் கொல்லப்பட்டு போகிறவர்களைவிட பன் மடங்கு அதிகமான பேர்களாவர்."

(இப்னு ஸீனு)

*　　*　　*

"மனிதன், ஆயுட்காலத்தில், 40வயது வரை உணவு பொருட்களைத் தாராளமாக, இஷ்டம்போல் உண்ணலாம். அதன்பின் அவன், உணவைக் குறைத்துக் கொண்டு பானத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்"

(தால்மோட்)

*　　*　　*

"உங்களுடன் அமர்ந்து உணவு உண்பவர்களை கௌரவப் படுத்துங்கள்; அதை விட்டு, உங்கள் உணவுப் பொருளை கௌரவப் படுத்தாதீர்கள்". (சாப்பாட்டுக்கு கௌரவம் கொடுத்து விட்டு, சாப்பிட வருபவர்களை அலக்ஷியம் செய்ய வேண்டாம்.)

(மைக்கேல் டிமாய்னென்)

*　　*　　*

"உணவு உண்ணும் போது, இடையிடையே மூச்சு விடுவதற்கும் அவகாசம் அளியுங்கள்."

(அதாவது, அவசர அவசரமாக, கோழி தவிடு விழுங்குவது போல் உண்ணாதீர்கள். நிதானமாய் கவளம் எடுத்து மென்று விழுங்குங்கள்; இடையில் கொஞ்சம் ஜலமும் சாப்பிடுங்கள். தொண்டை விக்கிக் கொள்ளும் வண்ணம் லபக்-லபக் என்று உண்ணாதீர்கள்.)

(டாயிட்ஸ் பிளாட்ஸ்)

*　　*　　*

(சாப்பிடும் போது, சிறு அளவாக, கவளம் எடுத்துப் புசியுங்கள்). 'சூப்' குடித்தால் கரண்டி நிறைய அள்ளி வாய் நிறைய ஊற்றாதீர்கள். கொஞ்சங் கொஞ்சமாய் எடுத்து, ருசி பார்த்துப் பருகுங்கள். (தண்ணீர் குடித்தாலும் வாய் நிறைய உறுஞ்சி கீழே சிந்த விடாதீர்கள்: சன்னமாக சுவைத்துக் குடியுங்கள்.)

(செனட்ஜான் பெட்டஸ்ட்)

*　　*　　*

"எவ்வளவு அதிகமாக உணவு உடலுக்குள் செல்லுமோ, அவ்வளவு அதிகமாக வியாதிகள் உண்டாய், வெளியே வரும். (மிதமாகவும், பசித்தபோதும், நல்லமுறையிலும், நிதானமாகவும் உண்பவர்களுக்கு நோய் நொடி வராது)

(லத்தீன் பழமொழி)

*　　*　　*

"பெரும் வயிற்றுக்காரன், தன் பற்களாலேயே தன் புதைக் குழியைத் தோண்டிக் கொள்கிறுன்."

(வயிறு புடைக்க, கடுமையான உணவை, அடிக்கடி உண்டு கொண்டே இருப்பது, சீக்கிரம் நோய் கண்டு, செத்துப் போவதற்கு அடையாளம். மீதூண் விரும்பேல்.) (பிரெஞ்சுப் பழமொழி)

* * *

"நிதானமாய், அமைதியாய் இருந்து வாழும் இன்பத்தை பெருண்டிக்காரனும், அஜீரண பேதிக்காரனும், வயிற்று வலிக்காரனும் இழந்து விடுகிறுன்" (அல்புரோஸ், பாரிஸ்)

* * *

"சாப்பிடப் போகும் போது மட்டும்தான் எனக்குப் பசிக்கும்" (மைக்கேல் திடாயின்)

(அதாவது, இவர் பசித்த பிறகு தான் சாப்பிடத் தொடங்குவார். அரை வயிறு சாப்பிட்டுப் பசி அடங்கியதும், உண்பதை நிறுத்திக் கொள்வார். உண்பொருளும், தின்பண்டமும் என்னதான் ருசியாகவும் நேர்த்தியாகவும் இருந்தாலும், நினைத்த போதெல்லாம், கிடைத்த போதெல்லாம் உண்ண மாட்டார்.)

* * *

"எந்த பானத்தையும் நிதானமாகக் குடிப்பவர்க்கும் உடல் கோளாறு ஏற்பட மாட்டாது." (மார்க் டுயின்)

* * *

"நல்ல உணவை, நல்ல முறையில், அளவோடு தின்பது விஷமத்தனம் அல்ல; பசிக் கொடுமையினுல் செத்துப் போக நேரிடுவது யோக்கியமான செயலல்ல!" (டாம்ஸ் பில்லர்)

* * *

உண்பதும் அளவோடு இருக்கட்டும்; போகிப்பதும் கணக்காக இருக்கட்டும், குடிப்பதும் நிதானமாய் இருக்கட்டும். (ரெண்டல் கோட்)

* * *

"உண்டு உண்டு ஒருவன் நோய்வாய்ப் பட்டு விட்டால், அவன் பட்டினி கிடந்து கிடந்து, சௌக்கியம் அடைந்து விடலாம்." (லங்கணம் பரம அவுஷதம்)

* * *

"பசியுடன் உண்க; ருசியுடன் உண்க; அயர்ந்து தூங்குக; சுருசுருப்பாய் விழித்தெழுக." (அல்ப் ரோஸ்)

* * *




# பேசுவதற்கு விளக்கு ஒளி ஏன்?

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

இஸ்லாமியக் கலீபாக்களில் உமர்பின் அப்துல் அஜீஸ் அவர்கள் மிகவும் பிரக்யாதிபெற்ற பெரியாராக இருந்தார். இவரை இரண்டாவது உமர் என்றும் கூறுவார்கள். முதல் உமர், நபிகள் நாயகம் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் இரண்டாம் தோழராகிய உமர் பாரூக் (றலி) அவர்களாவர். எனவே, உமர் பின் அப்துல் அஜீஸ், இஸ்லாமியப் பெரியார்களில் இரண்டாவது உமர் ஆவர்.

ஹஜ்ரத் உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள், அல்லாஹ்வுக்குப் பயந்து, இஸ்லாமிய ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டு, நியாய ஒழுங்கு மீறாமல் நேர்மையாய் நடந்து கொள்பவராவர்.

இப்பெரியார், இஸ்லாமிய நாடுகளுக்கே அதிபதியாய்- கலீபாவாக இருந்த போதிலும், ஆடம்பரமின்றி அடக்க ஒடுக்கமாய் சாதாரண மனிதரைப் போல் வாழ்ந்து வந்தார். மேலும், இஸ்லாமிய அரசாங்க பொக்கிஷமெல்லாம் அவரது கைவசமே இருந்த போதிலும், தமது சொந்த உபயோகத்துக்காக ஒரு காசும் அதிலிருந்து எடுத்துச் செலவு செய்ய மாட்டார். பொது ஜனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் சொந்தமான பொருளை, அது ஒரு அற்பபொருளாயிருந்தபோதிலும், அதைதன் சொந்த உபயோகத்துக்கு விரயஞ் செய்ய மாட்டார்.

உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள், கலீபாவாக இருந்த போது நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவத்தை, இங்கு எடுத்துரைப்போம். இதிலிருந்து அவரது எளிய சுபாவத்தையும், நேர்மை ஒழுக்கத்தையும் நன்கு தெரிந்து கொள்ளலாம். அதாவது:—

## பேசுவதற்கு விளக்கு வேண்டுமா?

ஒரு முறை, ஓர் இரவு, ஜனங்கள் தூங்கப்போகும் சமயத்தில், கலீபா உமர்பின் அஜீஸ் அவர்கள், அரசாங்க விவகாரம் சம்பந்தமான காகிதங்களையும் கணக்குகளையும், ஜைத்தூன் எண்ணெய் போட்டெரியும் குத்துவிளக்கு வெளிச்சத்தில், தன் இல்லத்தில் உட்கார்ந்து பார்

வை யிட்டுக்கொண்டிருந்தார். அப்போது, யாரோ ஒருவர், அவர் இருப்பிடம் வந்து, கதவைத் தட்டி "உள்ளே வரலாமா?" என்று கேட்டார்.

"வாருங்கள்" என்று கலீபா வரவேற்றார்.

அப்போதும், அரசாங்க காகிதங்களிலேயே அவரது பார்வை சென்று கொண்டிருந்தது.

கலீபா அவர்கள், வந்தவரை நோக்கி, "என்ன காரியமாக வந்தீர்? தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"நான் தங்களுடன், ஒரு சொந்த விஷயம் பற்றிப் பேசவேண்டும்" என்று சொன்னார்.

"அப்படியானால் அருகில் வந்து உட்காருங்கள்" என்று அனுமதி யளித்தார். வந்தவர், அருகில் வந்து அமர்ந்தார்.

உடனே கலீபா உமர் இப்னு அப்துல் அஜீஸ், விளக்கை அணைத்து விட்டு, "சரி, இப்போது தாங்கள், வந்த விஷயம் பற்றிப் பேசலாம்" என்று சொன்னார்.

வந்தவருக்கு ஆச்சரியமாய் விட்டது. "நாம் நேரில் பேசுவதற்காக வந்திருக்கிறோம்; இந்த சமயம் பார்த்து, விளக்கை அணைத்து விட்டாரே இதென்ன முறை?" என்று வியந்தார்.

"ஹஜ்ரத் விளக்கை அணைத்து விட்டீர்களே, நாம் பேசவேண்டாமா?" என்று வந்தவர் கேட்டார்.

அதற்கு, கலீபா உமர் இப்னு அப்துல் அஜீஸ், "ஜனுப்! நாம் இப்போது பேசப்போவது, நமக்குள் உள்ள சொந்த விஷயம். இந்த விளக்கும் இதில் உள்ள எண்ணெயும், இஸ்லாமிய அரசாங்கத்துக்கு சொந்தமான "பைத்துல் மால்" என்னும் பொதுச் சொத்து. தர்மகாரியத்துக்கு மட்டும் தான் இந்த விளக்கு எரியவேண்டும். பேசுவதற்கு இவ்வளவு அருகில் சுடர் விளக்கு வேண்டியதில்லை. அதோ தூரத்தில் சுவரில் எரியும் விளக்கின் மங்கலான ஒளியே போதுமானது" என்று பதில் அளித்தார்.

வந்த பெரிய மனிதர், கலீபா அவர்களின் நற்குண நற்சுபாவத்தை மனதுக்குள் பாராட்டிக் கொண்டு, பேசி முடித்து, வந்த வேலையை முடித்துக் கொண்டு போய் விட்டார்.

அதன் பின் கலீபா, தம் அருகில் உள்ள விளக்கை ஏற்றி, இஸ்லாமிய அரசாங்க விவகாரம் சம்பந்தமான கடிதத்தை பார்வையிட்டு, தம்காரியத்தை கவனித்துக் கொண்டிருந்தார்.

* * *

அருமைச் சிறுவர்களே!

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய புத்திமதியான படிப்பினை யாதெனில்:

1. ஹஜ்றத் உமர் பின் அப்துல் அஜீஸ், இஸ்லாமிய பேரதிகாரியான கலீபாவாக இருந்துங் கூட, எவ்வளவு அடக்க ஒடுக்கமாயும் ஆடம்பர மின்றியும் வாழ்ந்து வந்தார் என்பது.

2- அவர், கஜானு பணத்தை வீண்விரயம் செய்யாமல், மிகச் சிக்கனமாக காப்பாற்றி வந்தார். அரசாங்கத்துக்கு சொந்தமான விளக்கு எண்ணெயைக் கூட அவர், தம் சொந்தத்துக்கு செலவழிக்க வில்லை.

3. நாமும் இவ்வாறே நடந்து கொள்ள வேண்டும். "பேசுவதற்கு விளக்கு வெளிச்சம் எதற்கு?" என்பது யோசிக்கத்தக்க விஷயம்தான். இதன் கருத்து: எதிலும் சிக்கனத்தையும், நேர்மையையும் அனுஷ்டிக்க வேண்டும்.


# இரத்தச் சின்னம்

இது திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த ஒரு துப்பறியும் நாவல்

சிரச்சேதம் செய்யப்படுவதினின்று சீர்கெட்ட குற்றவாளி யொருவன் தற்செயலாகத் தப்பிப் பிழைத்திராவிடில், இரத்தச் சின்னம் என்னும் இரகசியக் குழு இயங்கத் துவங்கி இராது. நீதி பரிபாலனத்தில் பரிதவிக்கத் தக்க முறையில் நிகழ்ந்த இந்த அசம்பா விதத்துக்குச் சில வருடங்களுக்குப் பிறகு இரக்க சிந்தையற்றவனொருவன் இங்கிலாந்தில் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடலானான். தீர்க்க ஆலோசித்து திட்டமிட்டுத் திறமையோடும் தீரத்தோடும் செயலாற்றுவதன் மூலம் தனக்கு உதவியாளர்களாக ஏராளமான ஆட்களைச் சேகரித்துக் கொண்டான் அவன். ஒருவருக்கொருவர் பரஸ்பர பழக்க மில்லாமலும் அறிமுக மில்லாமலும் அதியற்புதச் செயல்கள் புரிந்த இந்த இரகசியக் குழுவிற்குத் தலைமை தாங்கிய மர்ம மனிதன் இரத்தச் சின்னம் என்று கையெழுத்திட்டான்.

அவனின் மர்ம இரகசியத்தைக் கண்டு பிடித்தல் மிக ஆச்சரியமானது. இதன் விலை ரூ. 1-28

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# திருக் குர்ஆன் சார சங்கிரஹம்

## பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

### ஹலாலான, தூய உணவையே உண்க!

பூமியிலிருந்து (பாடுபட்டு) கிடைக்கும் ஹலாலான (உழைப்பின்) உணவையும், (சம்பாத்தியம் புரிந்த) தூய உணவையுமே (முஸ்லிம்களே) நீங்கள், பிரியத்தோடு (தாராளமாய்) புசியுங்கள். (பணம், பொருள் சம்பாதிக்கும் விஷயத்தில்) ஷைத்தானுடைய அடிச்சுவட்டை (வழியை) பின்பற்ருதீர்கள். ஏனெனின் அவன் உங்களுக்குப் பகிரங்கமான பகைவன் ஆவான். மேலும் அவன் உங்களை(க் கெட்டுப் போக) தீய, பாப (ஆபாசக்) காரியங்களின் பக்கமே (உற்சாகப் படுத்தி) அழைத்துச் செல்வான். அல்லாஹ்வைப் பற்றிய, விரும்பத் தகாத (பாப கரமான) பேச்சுகளை உங்களால் மொழியச் செய்வான்.

### தின்னத் தகாத (ஹராமான) மாமிசங்கள் எவை?

நம்பிக்கை கொண்டவர்களே (முஸ்லிம்களே! இறைவனாகிய) நாம் உங்களுக்கு (ஜீவன சாதகமாக) ரிஸ்கு அளித்தவைகளி லிருந்து (இஷ்டம் போல்) புசியுங்கள்; அதற்காக அல்லாஹ்வுக்கு (நன்றி என்னும்) ஷுக்ரும் செய்யுங்கள். நீங்கள் உண்மையாளர்களாக (உத்தமர்களாக) இருந்தால், (இப்படி பேணி நடந்து கொள்ளுங்கள்.) இன்னும் உங்களுக்கு, அவ்விறைவன், செத்துப் போன (பிராணியின் மாமிசத்)தையும், (சாதாரண பிராணியின்) ரத்தத்தையும், பன்றியின் மாமிசத்தையும், அல்லாஹ்வுடைய பெயர் சொல்லி (பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர் என்று) அறுக்கப் படாத (பலியிடப் பட்ட) தின் மாமிசத்தையும் (உண்பதற்கு விலக்கப்பட்ட) ஹராமாக்கி இருக்கின்ருன். (இதிலிருந்து பேணிக் கொள்ளுங்கள்.) ஆனால், யாரேனு மொருவன் (பசியினால் உயிர் போகும்படியான) நிர்ப்பந்தமான நிலையில் இருந்தா லொழிய இப்படிப்பட்ட நிலையில் மனிதன் அதை உண்பது அவன் மீது குற்றமில்லை. (எப்படியும் அவன் தன் உயிரை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.) ஆயினும், (மனிதன்) அல்லாஹ்வுக்கு மாறுபாடு செய்யா திருப்பானாக. நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனாகவும், மகா அருள் புரிபவனாகவும் இருக்கின்ருன். (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: பகரா; ருகூஃ: 21)

### ஹஜ்ஜு காலத்தின் சில அனுஷ்டானக் கடமைகள்

(முஸ்லிம்களே), நீங்கள் ஹஜ்ஜுடையவும் உம்ராவுடையவும் நிய்யத்து (நிர்ணயம்) செய்து கொண்டீர்களாயின், அல்லாஹுக்காக

அதை (அவசியம்) நிறைவேற்றி வையுங்கள். (நீங்கள் ஹஜ்ஜுக்காக மக்காவுக்குப் புறப்படுகிறவர்களா யிருந்தும்) வழியில் (ஏதேனும் சங்கடத்தால்) தடுத்து நிறுத்தப் பட்டு விடுவீர்களாயின், அப்போது நீங்கள் (இருக்கும் இடத்திலேயே இருந்து) உங்களுடைய இயலுமான முறையில் குர்பானியை (மட்டுமாவது) நிறைவேற்றி வையுங்கள். குர்பானியை அதன் ஸ்தானத்தில் சேர்த்து வைக்கும் வரை, உங்கள் தலையை (க்ஷவரம் செய்து) முண்டனம் செய்து கொள்ளாதீர்கள். இங்ஙனமிருக்க, யாரேனும் உங்களில் ஒருவர், நோய் வாய்ப் பட்டுவிட்டால், அல்லது ஏதேனும் தலையில் வேதனை ஏற்பட்டு விட்டால், அப்போது தலை க்ஷவரம் செய்து கொள்வதற்குப் பதிலாய், பிதியா (என்னும்) பரிகார முறையில், நோன்பு நோர்க்க வேண்டும்; அல்லது (அதிகமாக) தான தர்மம் செய்ய வேண்டும். (நோய்) சங்கடம் தீர்ந்து போய்விட்டால், உம்ராச் சடங்கை ஹஜ்ஜுடன் சேர்த்து (செய்து) அனுகூல மடைய விரும்பினால், அப்படிப் பட்டவர், தனக்கு சௌகர்யமான வகையில் குர்பானி செய்வாராக. அங்ஙனம் குர்பானி செய்ய சௌகர்யப்படா விட்டால், ஹஜ்ஜுடைய நாட்களிலேயே, மூன்று நாள் நோன்பு நோர்க்க வேண்டும். வீட்டுக்குத் திரும்பி வந்த பின்னர் (சௌகர்யத்தோடு) ஏழு நோன்புகளை நோர்க்க வேண்டும். இவ்வாறு பத்து நாள் நோன்பு நோற்று, (ஹஜ்ஜின் கடமைகள் விட்டுப் போனதற்காக இவ்வாறு பரிகாரம் செய்து) அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்துகொள்வாராக. இன்றேல் அல்லாஹ் (பாபிகளை) மிகவும் தண்டிப்பவனாக இருக்கின்றான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூஃ: 24)

## ஹஜ்ஜு காலத்தில் பேணுதலாய் இருங்கள்

ஹஜ்ஜுடைய விசேஷ மாதம் (காலம்) யாதென்பது (எல்லோருக்கும்) தெரிந்த விஷயமாகும். எனவே அந்த நாட்களில் யாரேனும் (முஸ்லிம்), ஹஜ்ஜு செய்யும் நாட்டம் கொண்டு விட்டால், அவர் அந்த (புனிதமான நாட்களில் மனைவியுடனும்) சம்போகம் செய்யக் கூடாது; மற்றும் (சிறு) பாபங்களும் செய்யக் கூடாது. சண்டை சச்சரவுகளை விட்டும் பேணிக் கொள்ள வேண்டும். எனவே, நீங்கள் (ஹஜ்ஜு காலத்தில்) என்ன நன்மை செய்த போதிலும் அது அல்லாஹ் உடைய அறிவு ஞானத்தில் வந்துவிடும். (அல்லாஹ், அதற்காக பயனைத் தந்தருள்வான்.) (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூஃ: 25)

## பேணுதலாய் நடந்து கொள்வதே பெரிய சாதனம்

ஹஜ்ஜுக்குப் புறப்படுவதற்கு முன், போதுமான (அளவு பிரயாண) சாதனங்களை சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்

ருல், (முன்னேற் பாடான) சாதனங்களில் மிகச் சிறந்தது பேணுத லாய் நடந்து கொள்வதே யாகும். ஏ அறிவு, விவேக முடையவர் களே, (சடங்கு மட்டும் புரிவதை விட அல்லாஹ் வாகிய) எனக்குப் பயந்து (பேணுதலாய்) நடந்து கொள்ளுங்கள். (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூஃ: 25)

## ஹஜ்ஜு காலத்தில் ஏதேனும் சம்பாதிப்பது குற்றமில்லை

ஹஜ்ஜு வணக்கம் (சடங்குகளை) அனுஷ்டிப்பதோடு, நீங்கள் (ஹஜ்ஜுடைய விசேஷ காலத்தில்) அல்லாஹ் உடைய(உலக சம்பந்த மான) பாக்கிய (மாகிய வியாபாரத்துறை லாப)த்தையும் (சம்பாத்தி யத்தை) தேடிக் கொள்வீர்களாயின், உங்கள் மீது குற்றமில்லை. (அதாவது அவ்விசேஷ நாட்களில் ஏதேனும் வியாபாரம், விற்பனை செய்து கொஞ்சம் லாபம் சம்பாதித்துக் கொள்வது, முஸ்லிம்களுக்கு அனுமதிக்கப் பட்டிருக்கிறது.) (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூஃ: 25)

## 'அரபாத்'தின் பிறகும் அல்லாஹ்வை அதிகம் தியானியுங்கள்

(முஸ்லிம்களே), நீங்கள் அரபாத் (மைதானத்)திலிருந்து திரும்பி வந்து சேர்ந்த போது; அதாவது "மஷ்அருல் ஹராம்"(புனி தமாகிய தங்குமிடம் எனப்படும்) முஸ்தலிபாவில் வந்து தங்கும் போது, அங்கு அல்லாஹ்வை அதிகம் தியானித்துக் கொள்ளுங்கள். அதிகமாகத் தொழுது வணங்குங்கள். அவன் உங்களுக்கு கற்பித் துக் கொடுத்த பிரகாரம் வணக்கம் புரியுங்கள். அல்லாஹ் உங்களுக்கு சன்மார்க்கம் (இஸ்லாமிய சம்பிரதாயம்) காண்பித்துக் கொடுப் பதற்கு முன்னால், நீங்கள் அறியாமையிலும் வழி கேட்டிலும் கிடந் தீர்கள். (முஜ்தலிபாவில் தங்கி வணங்கிய) அதன் பிறகு நீங்கள் 'தவாப்' (கஃபாப் பிரதக்ஷணம்) செய்வதற்காக, எல்லோ ரும் செல்லும் (புனிதமான) இடத்துக்குச் செல்லுங்கள். அங்கு (தவாப்) செய்து விட்டு, அல்லாஹ் இடம் (மனம் உருகி) பாப மன்னிப்பு வேண்டிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ், மிகவும் மன்னிப்பவனுகவும், மகா அருள் புரிபவனுகவும் இருக்கின்ருன். இவ்வாறு நீங்கள் ஹஜ்ஜுடைய (சம்பிரதாயக்) காரியங்களை (ருக்னு களை)ப் பூர்த்திச் செய்து கொண்ட பின்னரும், (சௌகர்யம் போல் தொழுது வணங்கி) அல்லாஹ்வை (அதிகம்) தியானியுங்கள்; இவ் வாறே இங்கு உங்களுடைய (மூதாதைப்) பிதா-பாட்டங்கள் (இப் ராஹீம் நபி, இஸ்மாயீல் நபி முதலியோர்) அல்லாஹ்வை (அதிக மதிகம் தொழுது) தியானித்து வந்தார்கள். (ஜுஸு: ஸயகூலு; ஸூரா: அல்பகரா; ருகூஃ; 25)

## இப்ராஹீம் நபி ஸ்தாபித்த திரு மக்காவின் மகிமை

(உலக ஜனங்கள்) யாவரும் (ஏக நாயகனைத்) தொழுது வணங்குவதற்காக, உலகில் முதன் முதல் ஸ்தாபித்து வைக்கப்பட்ட புனித (தெய்வீக) இல்லம், திரு மக்காவில் (இருக்கும் கஃபத் துல்லாஹ்) உள்ள ஸ்தலமாகும். (மக்கமா நகர் பள்ளியாகிய) இது, மிக (புனிதமும்) அபிவிருத்தியும் (பரக்கத்தும்) உடைய தாகும். இவ்விஸ்தலம், சகல லோகத்துக்கும் சன்மார்க்கம் (பிரகாசம்) அளிக் கும் ஒரு சாதனமும் ஆகும். இங்கு (அநேக) விளக்கமான அத் தாக்ஷிகளும் இருக்கின்றன. (அதாவது) இப்ராஹீம் (நபி, தொழுது வணங்கித் தியானிப்பதற்காக) நின்றிருந்த இடமும் இருக்கின்றது. எனவே யாரேனும் (முஸ்லிம்), அதனுள் பிரவேசித்து இருந்தால், (இகத்திலும் பரத்திலும்) அவர் அமைதி உடையவராய் இருப்பார். எனவே, அல்லாஹ் உடைய புனித இல்லமாகிய இந்தக் கஃபாவை (தரிசித்து, இங்கு இருந்து தொழுது வணங்கி) ஹஜ்ஜு செய்வது (முஸ்லிம்) ஜனங்கள் (எல்லோர்) மீதும் கடமை யாகும். (தம் ஊரிலிருந்து சௌகர்யமாக) இங்கு வந்து சேரக் கூடியவர்கள் மீது இது கடமை யாகும். இங்கு வந்து சேர (சக்தியும்) வசதி யும் இருந்தும், (வந்து வணங்காமல்) நன்றி கெட்ட விதமாய் நடப் பவர்களைப் பற்றி, அல்லாஹ் (என்ன செய்ய வேண்டு மென்று) அறிந்தே இருக்கின்றான்: அல்லாஹ் உலகத்தினர் (தயவை) விட்டும் தேவையற்றவனாய் (தூயவனாய்) இருக்கிறான். (ஜுஸூ: லன்தனூ; ஸூரா: ஆல இம்ரான்; ருகூஃ: 11)

## இஸ்லாமே பரிபூர்ணமான சன்மார்க்கம்

(இறைவனாகிய) நான் இப்பொழுது, உங்கள் மீது என் அருட் பாக்கியங்களை பரிபூர்த்தியாக்கி யுள்ளேன்; உங்கள் மீ து பூர்த்தி யான உபகாரங்களைப் புரிந்துள்ளேன். இன்னும் நான், உங்கள் அனைவர்க்கும் பரிசுத்த இஸ்லாமையே சன்மார்க்கமாக தேர்ந் தெடுத்து (ஏற்றுக்) கொண்டுள்ளேன். (முஸ்லிம்களே, மத விஷ யத்தில் அல்லாஹ் உங்களுக்கு சௌகர்யமே செய்து தந்துள்ளான்.) எனவே, உங்களில் யாரேனும், பசிக் கொடுமையினால் இயலாதவராய் விட்டால், (உண்டு உயிர் காப்பாற்ற ஹராமான உணவு, மாமிசம் தவிர வேறொன்றும் கிடைக்காமல் போய் விட்டால்) அப்படிப்பட்ட நிலைமையில், பாபமான (தீய) கருத்தின்றி நிர்ப்பந்தத்திற்காக ஹரா மான (பொருள், அல்லது மாமிச) உணவு புசிக்க நேரிட்டால், அதனால் பாபமில்லை. அல்லாஹ், (இப்படிப்பட்டவர்களை) மிகவும் மன்னிப்பவனாகவும், மகா அருள் புரிபவனாகவும் இருக்கின்றான். (ஜுஸூ: லாயுஹிப்புல்லா; ஸூரா: அல்மாயிதா; ருகூஃ: 1)

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஹ்மத் பாகவி))

## தப்பிப்போன தொழுகையையும் கலாவான தொழுகைகளையும் பற்றிய விளக்கம்

யாரேனு மொருவன், அறிந்தும், வேண்டு மென்றே (மனம் முரணுகி) தொழுகையைத் தவற விட்டுப் போட்டு பிறகு அதை 'கலா' செய்ய வேண்டு மென்று விரும்பினுல், இப்படிப்பட்ட தொழுகைகளை கலா செய்யலா மென்பதற்கு ஆதாரமான ஹதீதொன்றும் காணப்படவில்லை. ஆகையால், அப்படிப்பட்ட மனிதன், தவ்பாவும் இஸ்திக்பாரும் செய்து, இறைவனிடம் பாப மன்னிப்பு வேண்டிக் கொள்ள வேண்டியது தான். சென்று போன பாபங்களுக்காக தவ்பா செய்து கொண்டு, இனிமேல் புதிதாய் தொழுகையை ஆரம்பித்து, விடாமல் தொழுது வரவேண்டும். "இனிமேல் எக்காரணத்தை முன்னிட்டும் தொழுகையைத் தவற விடமாட்டேன்' என்று பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும்.

‡ ஒப்பத் தக்க உத்ரு (தங்கடம்) காரணமாக, தொழுகைகள் விடப்பட்டுப் போயிருந்தால், அவைகளை ஒழுங்காக முறையே நிறைவேற்ற வேண்டும். அதாவது முதலில் ஸுப்ஹு தொழுகை, பிறகு ளுஹர், பின்னர் அஸர்— இவ்வாறாக நிறைவேற்ற வேண்டும்.

† கந்தக் யுத்தத்தின் போது, பகைவர்களின் மிகைப்புப் பயம் அதிக மிருந்த காரணத்தால், நபிகள் நாயகம் பெருமானுர் (ஸல்) அவர்களால் நான்கு வேளைத் தொழுகைகளை அக்நேரங்களில் தொழ முடியாமற்போய் விட்டது. எனவே அன்றிரவு திருநபி (ஸல்) அவர்கள், அந்த நான்கு நேரத் தொழுகைகளையும் முறையே ஜமாஅத்துடன் நிறைவேற்றினுர்கள்.

° மஸ்ஜிதிலோ, வேறெந்த இடத்திலோ ஜமாஅத்து நடைபெற்றுக் கொண்டிருந்தால், உடனே அந்த ஜமாஅத்தில்சேர்ந்து கொண்டு, அக் நேரத்துத் தொழுகையை நிறைவேற்றிக் கொள்ள

‡ நைலுல் அவ்தார்
† ஸஹீஹைன் முன்தகீ,
° ஸஹீஹைன், முன்தகீ

187028

வேண்டும்; பிறகே தப்பிப்போன தொழுகைகளை ஒழுங்கு முறைப் படி கலாவாகத் தொழ வேண்டும்.

தொழுது கொள்ள நாடியவருக்கு, உயிருக்கே ஏதேனும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் இருந்தால், அல்லது கடுமையான துன்பம் உண்டாகு மென்ற நிலைமையில் மன நிம்மதி யில்லாமலும் துடிதுடித்துக் கொண்டு மிருந்தால், அல்லது தயம்மம் செய்து சமிக்ஞையாகக் கூட தொழ முடியாமல் நிலைமை நெருக்கடியாக இருந்து, குறிப்பிட்ட நேரத்துத் தொழுகை தவறிப் போய் விட்டால், பின்னர் நிலைமை திருந்தி அமைதியானதும் முதலில் அந்தத் தொழுகையையே நிறைவேற்ற வேண்டும்; இத்தவறுக்காக அருளாளனாகிய ரஹ்மான் குற்றம் பிடிக்க மாட்டான் என்று உறுதியாக நம்பலாம்.

## மறந்து போகிற அல்லது தூக்கத்தினால் விட்டுப் போகிற தொழுகை பற்றிய ஆதாரங்கள்

யாரேனு மொருவர், ஏதேனுமோர் வேளைத் தொழுகையை, தெய்வாதீனமாக மறந்து விட்டால், அல்லது அஜாக்கிரதையாகக் கிடந்து தூங்கி விட்டால், பிறகு ஞாபகமோ விழிப்போ வந்தவுடன், சிறிதும் தாமதியாமல் அந்தத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்; அந்த தொழுகைக் குரிய (சரியான) நேரம் அது தான். கலாவாக திரும்பத் தொழ வேண்டியதைத் தவிர்த்து அந்தத் தவறுக்கு தண்டனையோ பரிகாரமோ கிடையாது.

× நபிகள் நாயகம் ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:—தன்னையும் மறந்து தூங்கிப்போய் விடுவதில், மனிதருடைய தவறு ஒன்றும் கிடையாது. தவறு யாதெனின்: விழிப்புடனும் ஞாபகத்துடனு மிருந்துங் கூட, அசட்டையாக தொழுகையை பிற்படுத்தி 'கலா' செய்து வைப்பது தான்.

எனவே, யாரேனும் தொழுகையை மறந்து விட்டால், அல்லது மறதியாக யிருந்து தூங்கி விட்டால், பிறகு ஞாபகம் வந்ததும் அல்லது தூக்கத்திலிருந்து விழித்தெழுந்ததும் தொழுது கொள்வதே மிக மிக நன்மையாகும்.

"என்னை ஞாபகத்தி லிறுத்திக் கொள்ளுங்கால் தொழுகையை நிலைநிறுத்திக் கொள்ளுங்கள்" என்று அல்லாஹுத் தஆலா, திருக் குர்ஆனில் திருவுள்மா யிருக்கிறான்.

× நஸாயி, திர்மிதி, முன்தகீ

‡ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், ஹஜ்றத் அலீ (றலி) அவர்கட்கு உபதேசம் செய்தருளியதாவது:—"அலியே, நீவிர் மூன்று காரியங்களில் தாமதம் செய்யா திருப்பீராக: 1-வது தொழுகை; 2-வது ஜனஸா- (அதாவது மையித்தை குளிப்பாட்டித் தயாரானதும் தொழ வைத்து அடக்கிவிட வேண்டும்;) 3-வது ஓர் ஸ்திரி விதவையாகிப் போய், அவள் மறுமணம் செய்து கொள்ளத் தகுதியானவளா யிருந்தால், எந்த விதமான மாப்பிள்ளை கிடைத்தாலும் உடனே அவளை நிக்காஹ் செய்து கொடுத்து விடவேண்டும்.

÷ ஒருமுறை, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய தொழுகை கூட, அசதியாய் தூங்கி விட்ட காரணத்தால் நேரம் தவறிப்போய் விட்டது. நாயகம் (ஸல்) அவர்கள் கைபர் யுத்த களத்திலிருந்து திரும்பி வந்த போதுதான் மேற்படி சம்பவம் நடைபெற்றது. எனவே, நாயகம் (ஸல்) அவர்கள் தூங்கி விழித்ததும், ஜமாஅத்துடன் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

இந்த வகையில் தவறிப் போகிற தொழுகைகள் பல இருந்தால், முதல் தொழவேண்டிய தொழுகையைத் தவிர்த்து மற்ற தொழுகைகளுக்கு பாங்கு சொல்ல வேண்டிய அவசிய மில்லை; ஆனால், தக்பீர் (இகாமத்) மட்டும் சொன்னால் போதுமானது. இந்த விதத்தில் விடப்பட்டு (தவறிப்) போகிற தொழுகைகளுக்கு, விடப்பட்டுப்போன கலா தொழுகை என்று நிய்யத்து செய்யாமல், 'அந்த நேரத் தொழுகை' என்று 'அதா'வாகவே நிய்யத்துச் செய்து தொழ வேண்டும்.

---

‡ திர்மிதி, மிஷ்காத்

÷ இமாம் அஹ்மத், முன்தகீ


**வல்லப நாச்சியார்**

இது துப்பறியும் ஓர் இனிய நாவல். படிக்கப் படிக்க மிக ருசிகரத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கக்கூடிய அழகிய கதை. விலை ரூ. 1–56

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். திருக்குர்ஆனின் **தப்ஸீரை** தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகருவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) $5\frac{1}{4}$ ஜுஸு வரை விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

**மூன்றும் பாகம்;** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ஃபு முடிய 7-ஸூருக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

**ஆறும் பாகம்:** அச்சாகிறது.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

[11]

1890-1900-ம் வருட காலம் எடிசனுக்குச் சந்தோஷமான காலமாகும். கடின உழைப்பாலும் பெரும் ஊதியம் நிறைந்த காலமாகும் இது. மைனு மில்லரை மணந்து கொண்டதால் அவருக்கு மேலும் மூன்று குழந்தைகள் பிறந்தன. வீட்டிலே குழந்தைகள் சுற்றி விளையாடிக் கொண்டிருந்த போதுதான் அவர் அதி முக்கிய ஆராய்ச்சிகள் செய்தார். அவரிடம் ஒரு மனப்பாடும் ஞாபக சக்தியும் நிறைந்திருந்தன. குழந்தைகள் கண்ணாமூச்சி விளையாடிக் கூச்சலிட்டுக் கொண்டிருந்த போதுகூட, சுய முயற்சியால் தாம் கற்றுக் கொண்ட ஆறு மொழிகளி லொன்றில் விஞ்ஞான சஞ்சிகைகளை அவர் அமைதியாகப் படித்துக் கொண்டிருப்பது வழக்கம்.

ஆராய்ச்சிக் கூடத்திலே தமது சிப்பந்திகளுடன் எடிசன் அடிக்கடி சண்டை யிடுவார். அவர்களை அவர் திட்டுவார். அவரை அவர்கள் திட்டுவார்கள். சனிக்கிழமை யன்று ஒரு சிப்பந்தியை 'டிஸ்மிஸ்' செய்வதும் திங்கட்கிழமை யன்று அந்நபரை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்வதும் அவருக்கு வழக்கமாகி விட்டன. கடினமான பரிசோதனைகள், கடுமையான உழைப்பு ஆகியவற்றால் ஏற்படும் அலுப்பு, சலிப்பைப் போக்கு வதற்காக அவர் அடிக்கடி தமாஷ்களும் செய்து கொள்வார்.

அனேக ஆண்டுகளாக எடிசனின் பழைய சிப்பந்திகளில் சிலர் தமது எஜமானரின் சுருட்டுகளை எடுத்து உபயோகித்து வந்தனர். இந்த விதமான களவுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கத்துடன் குதிரை மயிர், பசை, முதலிய துர் நாற்றம் வீசும் பொருள்களைக் கொண்டு சுருட்டு தயாரித்துக் கொண்டு வருமாறு சுருட்டு விற்பனை ஏஜெண்டுக்கு அவர் ஆக்ஞை யிட்டார். அந்த சமயத்திலே மிகவும் சிக்கலான பிரச்னைக்குப் பரிகாரம் காண்பதில் அவர் மும்முரமாக முனைந்திருந்தார். சில வாரங்களுக்குப் பிறகு அந்த ஏஜெண்டு வரும் வரை தாம் கொடுத்திருந்த 'ஆர்டர்' பற்றிய நினைவே அவருக்கு இல்லை. போலி சுருட்டுகளை அனுப்பி வைக்காதது பற்றி அந்த மனிதரை அவர் கடிந்து கொண்டார்.

மூன்று வாரங்களுக்கு முன்பே அந்த சுருட்டுகளை அனுப்பி விட்டதாக அந்த ஏஜெண்டு பதில் அளித்தார். ஆம், அவர் கூறியது வாஸ்தவம்தான். பரிசோதனையில் ஈடுபட்டிருந்த எடிசன் தமது சிப்பந்திகளுக்குப் பாடம் கற்பிப்பதற்காகத் தருவிக்கப்பட்டது

என்பதையும் அறியாமல் அந்த சுருட்டுகள் அனைத்தையும் அவரே உபயோகித்து விட்டிருந்தார்!

கிராமபோன், சலனப்படங்கள், மின்சார விளக்கு ஆகிய வற்றைப் போல எடிசனின் பிந்திய கண்டு பிடிப்புகள் விநோதமாகத் தோன்ற வில்லை. ஆயினும் உபயோககரமான பொருள்களைக் கண்டு பிடிப்பதில் அவருக்கிருந்த அபார திறமை அவரது வாழ்வு முழுவதும் வெளிப்பட்டுக் கொண்டே இருந்தது. அவரது கண்டு பிடிப்புகளில் சில சர்வ சாதாரணமானவையாக இருந்தன வாதலால் அவற்றைப் பற்றிய வேறு எவரும் ஏன் சிந்தித்துக்கூடப் பார்க்க வில்லை என மக்கள் வியப்புறலாயினர். இதற்கான காரணத்தை கெல்வின் பிரபு கூறினார். அது வருமாறு: "வேறு எந்த மனிதரும் எடிசனைப் போன்றவராக இல்லாதிருந்ததே காரணம் என நான் நினைக்கிறேன்."

சுரங்கத் தொழிலாளர்களின் நலனுக்கென மின்சார லாந்தரும் கண்டு பிடித்தார். சிறந்த பாட்டரி கண்டு பிடிக்கவும் அவர் முயற்சித்தார். பத்து வருட உழைப்புக்குப் பின், நிக்கல், இரும்பு அல்கலின் ஆகியவை கொண்ட சேர்க்கைப் பொருளை அவர் கண்டு பிடித்தார். இறுதியில், அநேக தொழில்களில் மின்சக்திப் பிரச்னைக்கு இன்றும் பரிகாரமாக இருந்து வரும் ஒரு சாதனத்தை அவர் உருவாக்கினார்.

சேமிப்பு பாட்டரி சம்பந்தமான பரிசோதனைகள், பரிசீலனைகள், உழைப்பு ஆகிய வற்றை மட்டுமே எடிசன் செய்திருந்தாலும்கூட—அதாவது, சேமிப்பு பாட்டரி தவிர மற்ற எந்த நவீன சாதனத்தையும் அவர் கண்டு பிடித்திரா விட்டால்கூட—அவர் ஒரு முக்கிய கண்டு பிடிப்பாளர் மட்டு மின்றிச் சிறந்த மனிதராகவும் இருந்தார் என்று கூற முடியும் என்பதாக கைத் தொழில் எஞ்சினீரொருவர் ஒரு சமயம் கூறியுள்ளார்.

வருடங்கள் செல்லச் செல்ல வயோதிகப் பருவத்தை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த போதிலும் காலச் சக்கரம் சுழன்று கொண்டு வருகிறது என்பதை அங்கீகரிப்பதற்கு அவர் மறுத்து வந்தார். தமது அறுபதாவது வயதிலுங்கூட அவர் நீண்ட நேரம் வேலை செய்து வந்தார். அவரது பிறந்த தினங்களின் போது அவரைப் பத்திரிகை நிருபர்கள் பேட்டி காண்பதை அவர் அறவே வெறுத்தார்.

"ஒரு மனிதன் வயோதிகனாய் வருகிறான் என்பதற்காக அவனை வாழ்த்துவது நரக வேதனை போன்ற செய்கை" என்று அவர் முணுமுணுப்பது வழக்கம்.

ஆனால், வருடந்தோறும் அவரை நிருபர்கள் பேட்டி கண்டு அதன் விபரத்தைப் பத்திரிகைகளில் பிரசுரித்தது பத்திரிகைக

ளுக்கே அலங்காரம் செய்வது போல் அமைக்திருந்தது. "உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன" என்று வினவும் நிருபருக்கு "காரியத்தில் கண் வைத்து அதை நிறைவேற்ற வேண்டு மென்பதில் உறுதியாக விருப்பதே வெற்றியின் இரகசியம்" என அவர் பதில் அளிப்பார். "அறிவுத் திறமை என்பது என்ன" என்ற கேள்விக்கு இரண்டு சதவிகித உற்சாகமும் தொண்ணூற்று எட்டு சதவிகித உழைப்புமே அறிவுத் திறமை" என்று அவர் விடையிறுப்பார்.

நிருபர்களிடம் அவர் அளித்த முக்கிய தகவல்களில் மேலும் சில வருமாறு: ஒவ்வொரு இரவும் மறு தினத்துக்குச் செய்ய வேண்டிய வேலை பற்றிக் காகிதத்தில் காள் குறிப்பு எழுதி வைத்துக் கொள்வது வழக்கம். மறுநாள் அந்த வேலையைப் பூர்த்தி செய்து முடிப்பேன். இதே மாதிரி ஒவ்வொருவரும் செயலாற்றினுல் ஒரு தினத்திலே இவ்வளவு சாதிக்க முடிந்ததா என்பது பற்றி அந்த நபருக்கு ஆச்சரியமாக விருக்கும்.

சில சமயங்களிலே, உதாரணமாக, புகையிலை உபயோகிக்கும் விஷயத்தில் மிதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று புத்திமதி கூறும் சமயத்தில் அவர் நாவை அடக்கிப் பேசுவது வழக்கம். நிருபரொருவரிடம் ஒரு தடவை அவர் கூறியதாவது: "என்னைப் பொறுத்தவரை, தினந்தோறும் பத்து முதல் இருபது சுருட்டுகளை நான் உபயோகித்து வருகிறேன். அந்த சுருட்டுகளும் மிகக் காரமானவை."

மூளைக்குக் கடுமையான வேலை அளிப்பதே நீடித்த ஆயுளும் நோயற்ற வாழ்வும் பெறுவதற்கான வழி என்பது அவரது நம்பிக்கை- உடற் பயிற்சியால் உபயோக மில்லை என்பது அவரது அபிப்பிராயம். மூளையைத் தாங்கிக் கொண்டிருப்பதே உடலின் உபயோகம் எனவும் மற்றப்படி உடலில் வேறு எந்த பிரயோஜனமும் இல்லை எனவும் அவர் கூறினர்.

தமது வேலை முறையை மாற்றிக் கொள்வதன் மூலம் அவர் ஆறுதல் பெற்ருர். ஒரு பிரச்னையைப் பல வாரங்கள் பரிசீலனை செய்தபின், மற்ருெரு பிரச்சனையில் அவர் கவனத்தைத் திருப்புவார். ஒரே சமயத்திலே அரை டஜன் பிரச்னைகள் அவரது கவனத்தில் இருந்துவரும். இடைவிடாது பல புத்தகங்களை அவர் படித்து வந்தார். ஒரு அகராதியை எடுத்து ஒரு பக்கத்தை ஒரு தரம் பார்த்ததும் அதிலுள்ள விஷயங்களை ஒன்று விடாமல் அவர் திரும்ப ஒப்புவிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.

எடிசனுக்கு அறுபத்தேழு வயதானபோது வெஸ்ட் ஆரஞ்சிலுள்ள அவரது பெரிய தொழிற்சாலையின் ஏழு கட்டிடங்கள் தீப் பற்றி எரிந்து போயின. இக்கட்டிடங்கள் இன்ஷூர் செய்யப்பட

வில்லை. தீ விபத்தால் ஏற்பட்ட சேதம் ஐம்பது லட்சம் டாலர் என மதிப்பிடப்பட்டது. ஆனால், எடிசன் அதைரியங் கொள்ள வில்லை. கட்டிட நிபுனர் நிர்மான வேலையின் காரணமாக அவர் மீண்டும் வாலிபப் பிராயத்தை அடைந்தார் என்றே சொல்ல வேண்டும். அடுத்த நாள் காலை சிப்பந்திகளை ஏவி சேதமடைந்த கட்டிட பாகங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கு மாறு செய்தார். இரண்டு வாரங்களுக்குள் இடிந்த பகுதிகள் அகற்றப்பட்டுப் புனர் நிர்மான வேலை துவங்கி விட்டது.

முதலாவது உலகப் பெரும் போரில் அமெரிக்கா பிரவேசித்த போது எடிசனுக்கு வயது எழுபது. அமெரிக்கக் கடற்படை மந்திரியின் வேண்டு கோளின்பேரில் கடற்படை ஆலோசனை போர்டு தலைவர் பதவியை அவர் ஏற்றுக் கொண்டார். டார்பிடோக்களைக் கண்டு பிடிப்பதற்கான கருவியை அவர் உருவாக்கினார். மேலும் நீர் மூழ்கிக் கப்பல்களுக்கு வழி காட்டுவதற்கென விளக்குகளையும் நீர் மூழ்கிக் கப்பல்கள் கடலுக்கு அடியில் கஷ்டமின்றி சஞ்சரித்து வருவதற்கான சாதனத்தையும் அவர் செய்தார். யுத்த காலத்தில் தேவைப்பட்ட பிரயோஜனமான கருவிகளைக் கண்டு பிடித்ததற்காகவும் இதர உதவிகள் அளித்ததற்காகவும் அமெரிக்க அரசாங்கத்தாரிடமிருந்து அவருக்குக் கௌரவ பதக்கம் கிடைத்தது.

கஷ்டமான காரியத்தை மேற்கொண்டு செய்து வந்த போதும் அதிக அலுவல்கள் இருந்து கொண்டிருந்த போதும் கூட நகைச்சுவையுடன் அவர் செயலாற்றி வந்தார். யுத்தத்தின் போது கடுமையாக உழைத்துக் கொண்டிருந்த போதும் ஒவ்வொரு நாள் காலையும் "ஹாஸ்யக் குறிப்பை"க் காட்டுமாறு அவர் வற்புறுத்தி வந்தார். வாஷிங்டனிலும் நியூயார்க்கிலும் அன்றைய தினம் புழங்கி வந்த சிறந்த வேடிக்கைப் பேச்சுகள் தந்தி மூலம் கிடைக்கும்; அவற்றை எழுதி வைத்துக் கொள்வார்கள். ஒவ்வொரு நாளும் வேலை துவங்கு முன் இந்த வேடிக்கைப் பேச்சுகள் கொண்ட குறிப்பைப் பார்த்துப் பரவச மடைவார்.

அரை நூற்றாண்டு காலமாக உலகின் பல பகுதிகளிலு முள்ள பிரசித்திப் பெற்ற மனிதர்கள் தமது தாமஷ்களை அவருக்கு அனுப்பி வந்தனர். அவற்றை ஒழுங்கு படுத்தி அவர் 'பைல்' செய்து வைத்தார்.

(தொடரும்)

18078

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# ஹஜ்ரத் காஜா ஜுனைத்துல் பக்தாதி

## றலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஜீவிய சரித்திரம்

அரும் பெரும் மெஞ்ஞான தத்துவங்களான தஸவ்வுப் தக்வா இபாதத் உபவாசம் என்ற இம்பானுடைய துறையில் துலங்கி விளங்கும் ஹஜ்றத் காஜா ஜுனைதுல் பக்தாதி றலியல்லாஹு அன்ஹு அவர்களின் அரிய ஜீவிய சரித்திரத்தைப் பார்க்க நம் நேயர்களில் அவனைவரும் அளவிறந்த ஊக்கங் கொண்டிருக்கலாம் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஹஸ்ரத் அவர்களின் உஸ்தாதாகிய ஹஜ்றத் சரீயிஸ் ஸிக்தி றலியல்லாஹு அன்ஹு அவர்களிள் அரிய மெஞ்ஞான உபதேசங்களை எற்று நடந்தொழுகிய ஹஜ்றத் காஜா ஜுனைத் அவர்கள் உலக மெஞ்ஞானிகளுக்கோர் வழி காட்டிய தீபத்தைப் போலாவார். தமது திவ்விய உபதேசங்களினால் அந்தகாரத்தை தவிர்த்து மெஞ்ஞான ஒளி வீச செய்திருக்கிறார். தஸவ்வுபின் அபேக்ஷகர்கள் இவ்வரிய நூலை வாங்கி வாசித்து அம்மகானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடத்தல் அவசியம்.

கிளேஸ் காகிதம் விலை ரூ. 1—28

---

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# யூனனி வைத்திய முறைகள்.

## இரண்டாம் பதிப்பு

(தமிழில்)

இந்த புஸ்தகம் பல உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப் பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்பு களுக்கு அடியில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடியில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப்பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டி லேயே சொர்ப்ப செலவில் தயாரித்துக் கொள்ளக் கூடிய வைகள். இதில் கூறப்பட்ட தலைப்புகள்:—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்பந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷ யங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப் பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன: சில விடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50. மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக் கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டி யது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 3

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.